

# 2015

# වාර්ෂික වාර්තාව
# ஆண்டறிக்கை
# Annual Report

රජයේ මුද්‍රණ නීතිගත සංස්ථාව
அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்
State Printing Corporation

ஆண்டறிக்கை, கணக்குக் கூற்றுக்கள் மற்றும்
கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை

# அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்

# 2015

## ஆண்டறிக்கை

2015 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த 48 வது ஆண்டுக்கானது.
2015 ஜனவரி மாதம் 01 ஆம் திகதியிலிருந்து
2015 டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை

# நிறுவனத்தின் நோக்கு

அச்சுத் தொழிலில் முன்னோடியாக திகழ்வதன் மூலம் வெளியீட்டில் அதிலும் குறிப்பாக கல்வி அபிவிருத்தி வெளியீட்டை ஊக்குவித்து பாதுகாப்பதுடன் அப்பியாச புத்தக மற்றும் காகிதம் உட்பட எழுதுவதற்கு தேவையான பொருள்களின் விற்பனை மற்றும் சந்தை ஆகியவற்றில் முன்னோடியாக திகழுதல்.

# பணி

திறமையும் தைரியமும் மிக்க மனநிறைவு கொண்ட ஊழியர்களைக் கொண்ட முன் உதாரணமான அரச கூட்டுத்தாபனமாக திகழ்வதுடன் அச்சுத் தொழிலில் அதி உயர் தரத்திற்கு ஏற்ப போட்டியான விலைக்கு அச்சுப் பொருள் உற்பத்திகளை மக்களின் தேவை மற்றும் நலம் கருதி விநியோகித்தல்.

பானலுவ,
பாதுக்க.

கௌரவ அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சர்,
அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு,
ரொரிங்டன் சதுக்கம்,
கொழும்பு – 07.

கௌரவ ஐயா,

நிதிச் சட்டம் இலக்கம் 38, 1971, 14 வது பிரிவின்படி, 1, ஜனவரி இலிருந்து 31.12.2015 வரைக்குமான ஆண்டு தொடர்பாக பின்வருவனவற்றை பணிப்பாளர் சபையின் சார்பில் உங்களிடம் சமர்ப்பிக்கிறேன்.

1. அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகள் பற்றிய வருடாந்த அறிக்கை.
2. கணக்காய்வு செய்யப்பட்ட ஐந்தொகை, செயலாற்று கணக்குகள் மற்றும் இலாப, நட்ட கணக்கு.
3. கணக்காய்வாளர் நாயகத்தின் கருத்துரைகள்.

தங்களின் கவனத்திற்காக முன்வைக்கின்றேன்.

தங்கள் விசுவாசமுள்ள,

**ரவீந்திர யசலால் கலன்சூரிய**
தலைவர்
அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்

# தலைவரின் செய்தி



இலங்கையில் அச்சுக் கைத்தொழில் துறையில் முன்னோடியாக 1968 ஆம் ஆண்டு தொடக்கம் படிப்படியாக முன்னேறி 45 ஆண்டு காலப்பகுதியில் தடைகளைத் தாண்டி கடந்து வந்து வெற்றிப் பாதையை பின்னோக்கிப் பார்க்கும் போது முடிவடைந்த மற்றுமொரு காலப்பகுதிக்கென தயாரிக்கப்படும் 2015 ஆண்டுக்கான ஆண்டறிக்கை மற்றும் கணக்கு கூற்றுக்களை இலங்கை மக்களின் முன்னிலையில் சமர்ப்பிக்க கிடைத்தமையையிட்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

நல்லாட்சியை முதன்மையாகக் கொண்டு இணக்கவாத ஆட்சியினூடாக அடியெடுத்து வைத்த அதிமேதகு ஜனாதிபதி உட்பட புதிய அரசாங்கத்தின் ஆட்சியை யதார்த்தபூர்வமாக்குவதற்கு பங்களிப்பை வழங்க வாய்ப்பு கிடைத்தமையானது எமக்கும் நாட்டிற்கும் எதிர்காலத்து சுபீட்சத்திற்கு உறுதுணையாக அமையுமென்பதில் ஐயமில்லை. அத்துடன் கடந்த காலத்தில் பின்னடைவை சந்தித்த நாம், சந்தையில் மீண்டும் எமக்கென இடத்தை பிடித்து அதீத இலாப எண்ணக்கருவை விட்டு விலகி முழு அளவிலான போட்டி வாய்ந்த சந்தையில் அளவான இலாப எண்ணக்கருவின் ஊடாக அதிகமான வர்த்தக வாய்ப்புக்களை எற்படுத்திக்கொண்ட நிறுவனத்தின் நிதி பயன்களை மென்மேலும் வளர்ச்சியடையச் செய்த இற்றைவரை பேணி வந்த முறைமைகளை மிக வேகமாக முன்னோக்கி எடுத்துச் செல்வதற்கு அடித்தளம் இட்டுள்ள தருணத்தில் சமுதாயத்தின் நன்மை கருதி வெளிப்படை தன்மையைப் பேணி கடந்த காலப்பகுதியில் கூட்டுத்தாபனத்தின் பாதையை வெளிகொணரும் வருடாந்த அறிக்கையை சமர்ப்பிக்கப்படுவது மகிழ்ச்சியளிக்கின்றது.

பல யுகங்களாக காணப்பட்ட பல்வேறு மோதல்கள், தடைகளை மீறி மேலும் எதிர் நீச்சல் அடிக்கும் தருவாயில் போட்டித் தன்மை வாய்ந்த சந்தையில் தனிமைப்படுத்தப்பட்ட அம்சங்களை நிவர்த்தி செய்து ஆசியாவின் முன்னோடி என்று பெற்ற நன்மதிப்பை எதிர்காலத்தில் அகிலத்தின் முன்னோடியாகும் கனவினை நனவாக்கும் பயணத்தை ஆரம்பித்துள்ள இத்தருணத்தில் அதனை வெற்றியடையச் செய்வதற்கு இந்த யுகத்தின் விசேட பணிக்காக அர்ப்பணித்த நல்லாட்சி இணக்க அரசாங்க ஆட்சியின் முக்கிய காரணகர்த்தாவாகிய அதிமேதகு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களையும் கௌரவ பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவர்களையும் அன்போடும் கௌரவத்தோடும் நினைவு கூறுகின்றேன். அத்துடன் அவர்களது முழு அனுசரணை மற்றும் ஆசிர்வாதத்தோடு எமது பயணத்தை வழிநடத்தி நித்தமும் பங்களிப்புச் செய்து எம்மை சிறந்த வழியில் இட்டுச் செல்லும் கௌரவ பாராளுமன்ற மறுசீரமைப்பு, வெகுசன ஊடக அமைச்சர் கயந்த கருணாதிலக்க அவர்களையும் பிரதி அமைச்சர் கருணாரத்ன பரணவித்தான அவர்களையும் நன்றியுணர்வுடன் நினைவு கூறுகின்றேன்.

நிறுவனத்தின் செயற்பாடுகளை மேற்பார்வை செய்து செல்ல வேண்டிய பாதையை தெரிவு செய்து நல் வழிகாட்டி நம்பிக்கையுடன் செயற்படும் அமைச்சின் செயலாளர் நிமல் போப்பகே அவர்களையும் எமது கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபை எதிர்காலத்தை கட்டியெழுப்புவதற்கு எனக்கு உறுதுணை அளிப்பதை கௌரவத்துடன் நினைவுகூர்வதுடன், இலங்கையின் அச்சுத்துறையில் முன்னோடியாக ஒத்துழைப்பு வழங்கி கூட்டாக இணைந்து வலுவான அணியாக வடிவமைக்கப்பட்டுள்ள கூட்டுத்தாபனத்தின் ஊழியர் குழாமையும் நன்றியுடன் நினைவு கூறுகின்றேன்.

**ரவீந்திர யசலால் கலன்சூரிய**
தலைவர்
அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்

# 2015

## பணிப்பாளர் சபை

**தலைவர்**

திரு. ரவீந்திர யசலால் கலன்சூரிய

**வேலை பணிப்பாளர்**

திரு. நெனசேன ஆதிஹெட்டி

**பணிப்பாளர்கள்**

1. திருமதி டப்ளியு. கே. டீ. டன்ஸ்டன்
2. திரு. டப்ளியு. ஏ. டீ. எஸ். குணசிங்ஹ
3. திரு. ஜீ. எம். நீல் குணதாச
4. திரு. பன்துல குருசிங்ஹ
5. திரு. தர்சன பொன்னம்பெரும

# 2015

# நிறைவேற்று அதிகாரிகள்

**பொது முகாமையாளர்**
திரு. ஆர். எம். என். மொனறவில

**நிதி முகாமையாளர்**
திரு. என். டி. பிரியங்கர குமார

**வேலை முகாமையாளர்**
திரு. எஸ். டீ. கருணாரத்ன

**விநியோக முகாமையாளர்**
திரு. ஈ. வீ. கே. கீர்த்திரத்ன

**முகாமையாளர் (நிர்வாக, மனித வளங்கள் அபிவிருத்தி)**
திரு. எம். யூ. டி. பண்டார

**சந்தைப்படுத்தல் முகாமையாளர்**
திரு. எம். டீ. ஜே. பெரேரா

**பிரதி வேலை முகாமையாளர்**
திரு. டீ. எம். எம். பீ. திசாநாயக்க

**பிரதி வேலை முகாமையாளர்**
திரு. டீ. எம். ஆர். என். தென்னகோன்

**பிரதி நிதி முகாமையாளர்**
திரு. எச். திலகரத்ன

**முகாமையாளர் (காகிதாதிகள் தொழிற்சாலை)**
திரு. எல். டீ. பிரேமசிறி

**கணக்காளர்**
திரு. எம். ஆர். பீ. ஜயவர்தன

**கணக்காளர்**
திரு. டப். எல். தெனியகே

**உள்ளக கணக்காய்வாளர்**
திரு. ஏ. எஸ். சீ. சில்வா

**உதவி வேலை முகாமையாளர் (மதிப்பீடு)**
திரு. கே. டீ. டீ. சந்திரசிறி

**உதவி வேலை முகாமையாளர் (பாதுகாப்பு அச்சிடல் பிரிவு)**
திரு. எம். ஏ. கொதலாவல

**உதவி வேலை முகாமையாளர் (செயற்பாடு)**
திரு. எஸ். டீ. குமாரசிங்க

**உதவி வேலை முகாமையாளர் (புத்தகம் கட்டுதல்)**
திரு. எம். ஏ. சாந்த குமார

**உதவி வேலை முகாமையாளர் (லிதோ)**
திரு. பீ. கே. திலக் மஹிந்த

**உதவி முகாமையாளர் (விற்பனை)**
திரு. எச். ஆர். குணசேகர

**உதவி முகாமையாளர் (பாதுகாப்பு)**
திரு. டப். டப். எம். ஆரச்சிகே

**உதவி முகாமையாளர் (நிர்வாக, மனித வளங்கள் அபிவிருத்தி)**
திரு. கே. எச். பீ. சஜீவ

# 2015

# பணிப்பாளர் சபையின் அறிக்கை

நிதிச் சட்டம் இலக்கம் 38, 1971, 14 வது பிரிவின்படி, அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபை 31.12.2015 இல் முடிவடைந்த ஆண்டில் கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகளை உள்ளடக்கிய 48 ஆவது அறிக்கையை சமர்ப்பிப்பதில் மகிழ்ச்சியடைகிறது.


மதிப்பீட்டு ஆண்டில் 09 சபைக்கூட்டங்கள் நடாத்தப்பட்டன.

## 01. உற்பத்தி

### 1.1 பாடசாலை பாட நூல்கள்


### 1.1.1 பாடசாலை நூல்களை அச்சிடுதல்

பாடசாலை பாட நூல்களை அச்சிடும் அடிப்படை நோக்கத்துடன் கூட்டிணைக்கப்பட்ட கூட்டுத்தாபனம் திறந்த பொருளாதாரம் அறிமுகம் செய்யப்பட்டதோடு ஏனைய உற்பத்தி பணிகளையும் மேற்கொள்ள அதன் செயற்பாடுகளை விஸ்தரித்துள்ளது. இதன்படி, கல்வி வெளியீட்டு திணைக்களத்திடமிருந்து பணிக்கட்டளைகளை பெறுவதற்கான கேள்விகளில் கூட்டுத்தாபனம் போட்டியிடவேண்டி நேரிட்டது. ஆனால் 2014ம் ஆண்டில் கல்வி வெளியீட்டுத் திணைக்களம் கேள்வி நடைமுறைக்கு அப்பால் கூட்டுத்தாபனத்தில் பாடநூல்களை அச்சிடுவதற்கு மந்திரி சபையின் அனுமதி கிடைத்தது. அதன்படி 2015 வருடம் 9.1 மில்லியன் பிரதிகளை அச்சிடுவதன் மூலம் கூட்டுத்தாபனம் 735,111 மில்லியன் ரூபாவை சம்பாதித்தது.





2013 ஆம் ஆண்டு, 2014 ஆம் ஆண்டு ஆகியவற்றுடன் ஒப்பிடுகையில் மதிப்பீட்டு ஆண்டில் பாடசாலை நூல்கள் அச்சிடுவதன் மூலம் கிடைத்த வருமானம் பின்வருமாறு:


| பாடசாலை அச்சு வேலை | 2013 ('000) | 2014 ('000) | 2015 ('000) |
|---|---|---|---|
| பிரதிகள் தொகை | 8,546 | 8,406 | 9,110 |
| வருமானம் - ரூபா | 758,335 | 789,897 | 735,111 |




### 1.2 ஏனைய அச்சு சேவைகள்

அறநெறி பாடசாலை நூல்கள், பாதுகாப்பு அச்சு சேவைகள் (லொத்தர் சீட்டுக்கள், ரிதீரேக்கா, வங்கி வைப்புச் சான்றிதழ்கள், தபால் அலுவலக வேபல்கள், விமான நிலைய சுப்பர் சீட்டிழுப்பு) ஏனைய அரசாங்க அச்சு சேவைகள் இதற்கு மேலாக, பல்வேறு நிறுவனங்களின் பல்வேறு பணிகளான நாட்குறிப்பேடுகள், நாட்காட்டிகள் ஆகியனவும் அச்சிடப்பட்டன. இதற்கு மேலாக பல்வேறுபட்ட நிறுவனங்களின் அச்சு சேவைகளை நிறைவேற்றியுள்ளது. விஷேட அச்சு சேவைகள் கீழே காட்டப்பட்டுள்ளது.




## 1.2.1 பாதுகாப்பு அச்சிடும் பணி

தேசிய லொத்தர் சபையின் மஹஜன சம்பத்த லொத்தர் சீட்டுக்கள் கடந்த 40 வருடங்களாக அச்சிடப்பட்டு வருகின்றன. மேலும், பவர் லொட்டோ மற்றும் விமான சுப்பர் சீட்டிழுப்பு, சீட்டுக்கள் அச்சிடப்பட்டன. லொத்தர் சபையின் சகல அச்சு வேலைகளை செய்வது கொடுத்ததுடன் 2015 ம் ஆண்டில் அச்சிட்ட லொத்தர் சீட்டுக்களின் அளவு 283 மில்லியன் ஆகும். இதற்கான வருமானம் 163 மில்லியன் ரூபா ஆகும்.

லொத்தர் அச்சிடுவதில் இருந்து கிடைத்த வருமானம், அச்சிடப்பட்ட சீட்டுக்களின் தொகை ஆகியன பின்வருமாறு:

| லொத்தர் அச்சிடுதல் வேலை | 2013 ('000) | 2014 ('000) | 2015 ('000) |
|---|---|---|---|
| பிரதிகள் தொகை | 242,991 | 244,655 | 283,329 |
| வருமானம் - ரூபா | 136,124 | 137,007 | 163,497 |

## 1.2.2 விசேட அச்சு சேவைகள்

அமைச்சுக்கள் அரசாங்க திணைக்களங்கள் மற்றும் தனியார் துறைகளிடமிருந்தும் அச்சு வேலைக்கான கட்டளைளை பெற்றுக்கொள்ள விஷேட கவனத்துடன் செயற்பட்டன அச்சு வேலைகளில் பின்வரும் பணிகளும் அடங்கியிருந்தன.

01. பல்வேறு நிறுவனங்களின் வருடாந்த அறிக்கைகள்
02. அரச மருந்தக கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அச்சுப் பணிகள்.
03. பல்கலைக்கழக சான்றிதழ்கள்
04. தேசிய மிருகக் காட்சிச்சாலைக்குரிய அனுமதிச்சீட்டு மற்றும் வேறு விபரச் சீட்டுக்கள்.
05. திரைப்பட அனுமதிச் சீட்டுக்கள்
06. ஊழியர் நம்பிக்கை நிதியம் தொடர்பான பல்வேறு அச்சுப் பணிகள்
07. தேசிய சேமிப்பு வங்கியின் அச்சு வேலைகள் (ரிதீரேக்கா சான்றிதழ்கள்)
08. பரீட்சைத் திணைக்களத்துக்காக அச்சிடப்படும் விடைஎழுதும் விடைத்தாள்கள்.
09. புள்ளி விபரத் திணைக்களத்துக்குரிய அச்சுப் பணிகள்.


மதிப்பீட்டு ஆண்டில் பல்வேறு அச்சு வேலைகள் மூலம் கூட்டுத்தாபனம் 118.4 மில்லியன் ரூபாவை சம்பாதித்தது.


## 1.3 அப்பியாசக் கொப்பிகளையும் ஏனைய காகிதாதிகளையும் தயாரித்தல்

மதிப்பீட்டு ஆண்டில் உற்பத்தியும 2013, 2014 ஆம் ஆண்டுகளுக்கான ஒப்பீட்டு புள்ளி விபரங்கள்

| அப்பியாசக் கொப்பிகளும் ஏனைய காகிதாதியும் | 2013 ரூ. ('000) | 2014 ரூ. ('000) | 2015 ரூ. ('000) |
|---|---|---|---|
| பிரதிகள் தொகை | 10,141 | 8,615 | 11,147 |
| வருமானம் - ரூபா | 228,563 | 204,210 | 251,600 |

எதிர் பார்த்த அப்பியாசக் கொப்பிகளை களஞ்சியப்படுத்தி வைப்பதற்கு இடவசதிகள் போதாமையால் 2015ம் ஆண்டு 13,441 மில்லியன் ரூபா உற்பத்தியை அடைய முடியாமல் போனது.





## 02. விற்பனை/சந்தைப்படுத்தல்

2015 ம் ஆண்டு முழு விற்பனை இலாபம் முன்னைய ஆண்டைவிடவும் 8,427,719.00 ரூபா குறைவடைந்துள்ளது.

| வருடம் | 2013 ரூபா | 2014 ரூபா | 2015 ரூபா |
|---|---|---|---|
| மொத்த விற்பனை பெறுமதி | 235,593,167.00 | 250,459,494.00 | 242,031,775.00 |




எங்கள் பிரதான வருமான விழிகள் இரண்டாவதுடன் அப்பியாசக் கொப்பி விற்பனைக்காக அவசியமான வேகத்துடன் விற்பனையாகும் அத்தியவசியமான பொருட்கள் பாடசாலை வாரத்தில் குறைவாக இருந்தமையால், கட்டளைகள் கிடைக்கப் பெறாமையால், அலுவளக காகிதாதிகள் விற்பனைக்கான விநியோக தேவைப்பாடுகள் ஆண்டு முழுவதும் ஒழுங்கான முறையில் நடைபெறவில்லையால் இவ் வருமானம் குறைவடைந்துள்ளது.

### வெளியீட்டுச் சேவை

வெளியீட்டு வருமானம் சிறிதளவு அதிகரித்துள்ள போதும் இப்பிரிவை வழிநடத்த பொருத்தமான வெளியீட்டு முகாமையாளர் ஒருவரையோ அல்லது வெளியீட்டு அதிகாரி ஒருவரையோ பதவிக்காக சேர்த்துக்கொள்ளப்படவில்லை, எதிர் வரும் காலங்களில் புதிய வெளியீட்டு முகாமையாளர் ஒருவரை பதவிக்காக சேர்த்துக்கொள்ள இருப்பதால் எதிர் வரும் ஆண்டுகளில் சிறந்த முன்னேற்றத்தை எதிர்பாக்க முடியும்.

## 03. நிலையான சொத்துக்கள்

**கூட்டுத்தாபனத்தின் நிலையான சொத்துக்கள் 2015 ஆம் ஆண்டு முடிவில் ரூபா 397,197,548 ஆகும். இதன் எழுதப்பட்ட பெறுமதி ரூபா 99,679,966 ஆகும். முந்திய வருடத்துடன் 2014 ஒப்பிடுகையில் முறையே ரூபா 375,101,361 மற்றும் ரூபா 93,143,947 ஆகும்**

| நிலையான சொத்துக்கள் | 2013 ரூ.('000) | 2014 ரூ.('000) | 2015 ரூ.('000) |
|---|---|---|---|
| திறந்த பெறுமதி (செலவினத்தில்) | 337,870 | 365,513 | 375,101 |
| வெளியீடு | 99,983 | 93,143 | 99,680 |

## 04. வரி பொறுப்பு


வருமான வரியாக ரூபா 821,094/- பங்கு இலாப வரியாக 2015/2016 மதிப்பீட்டு ஆண்டுக்கான 2015ஆம் வருட இறுதி கணக்குகளில் கூட்டுத்தாபனத்தினால் பதியப்பட்டுள்ளது.

| வரி பொறுப்பு | 2013 ரூ. ('000) | 2014 ரூ.('000) | 2015 ரூ.('000) |
|---|---|---|---|
| வருமான வரி | 30,828 | 27,260 | 821 |
| பங்குலாப வரி | 5,454 | 2,363 | - |
| மொத்தம் | 36,282 | 29,623 | 821 |

## 05. இலாபம்

2015 ஆம் ஆண்டில் பெறப்பட்ட வரிக்கு முந்திய இலாபம் 2,932,478/- ரூபாவை உழைத்ததுடன், அது 2014 ஆம் ஆண்டில் கிடைத்த வரிக்கு முந்திய இலாபம் 71,153,661/- ரூபாவாகும்.


| இலாபம் | 2013 ரூ.('000) | 2014 ரூ.('000) | 2015 ரூ.('000) |
|---|---|---|---|
| வரிக்கு முந்திய இலாபம் | 78,096 | 71,154 | 2,932 |
| வரி செலுத்திய பின்னர் நிகர இலாபம் | 41,813 | 41,531 | 2,111 |



## 06. போனஸ்

தகுதி வாய்ந்த ஊழியர்களுக்கு வருடாந்த போனஸ்சாக இரண்டு மாத சம்பளத்திற்கு சமமான தொகையான 50,660,006/= ரூபா வழங்கப்பட்டது. 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் இந்தத் தொகை 24% சதவீதம் அதிகமானது.

| போனஸ் | 2013 ரூ. ('000) | 2014 ரூ. ('000) | 2015 ரூ. ('000) |
|---|---|---|---|
| | 35,260 | 40,724 | 50,660 |




## 07. சேமநலன்

முன்னைய வருடத்தை போன்றே இந்த வருடமும் ஊழியர்களுக்கு சேமநல வசதிகள் பின்வருமாறு வழங்கப்பட்டன. இதற்காக கூட்டுத்தாபனம் 120 மில்லியன் ரூபாவை செலவிட்டது.

| | சேமநலன் | 2013 ரூ.('000) | 2014 ரூ.('000) | 2015 ரூ.('000) |
|---|---|---|---|---|
| 01. | ஊழியர்களுக்கான போக்குவரத்து வசதிகள் | 3,064 | 3,274 | 2,595 |
| 02. | ஊழியர்களுக்கான ஊக்குவிப்பு கொடுப்பனவு | 5,872 | 5,804 | 5,904 |
| 03. | மருத்துவ வசதிகள் | 5,542 | 4,856 | 6,018 |
| 04. | பல்வேறு சேமநல வசதிகள் | 17,845 | 27,016 | 24,703 |
| 05. | ஊழியர் இழப்பீட்டு காப்புறுதி | - | 216 | 228 |
| 06. | சகல ஊழியர்களுக்கும் காகிதாதிகளுக்கான கொடை வவுச்சர்கள் | 1,132 | 1,146 | 1,251 |
| 07. | ஊழியர்களுக்கான போனஸ் | 35,260 | 40,724 | 50,660 |
| 08. | ஊழியர்களின் வீடமைப்பு கடன் வட்டியை மீளளித்தல் | 4,207 | 4,935 | 4,938 |
| 09. | பயன்படுத்தப்படாத விடுமுறைகளுக்கான கொடுப்பனவு | 11,319 | 13,051 | 16,939 |
| 10. | விசேட கொடுப்பனவு | 3,495 | 3,408 | 6,700 |
| | மொத்தம் | 87,736 | 104,430 | 119,891 |

## 08. ஆளணி

நடப்பு வருடத்தில் கூட்டுத்தாபன ஊழியர்களின் எண்ணிக்கை 694 ஆகும்.

| ஊழியர் எண்ணிக்கை | 2015 |
|---|---|
| அலுவலகம் | 142 |
| பிரதான தொழிற்சாலை | 371 |
| காகிதாதி தொழிற்சாலை | 55 |
| பாதுகாப்பு பிரிவு | 46 |
| விற்பனை நிலையங்கள் | 40 |
| சமயா சமய, ஒப்பந்த அடிப்படையிலான ஊழியர்கள் | 23 |
| நாட்கூலி தொழிலாளர்கள் | 17 |

மதிப்பீட்டு ஆண்டின் போது பின்வரும் நிறைவேற்று அதிகாரிகள் சேவையில் இருந்து விலகிக் கொண்டார்கள்.

| | பெயர் / பதவி | திகதி |
|---|---|---|
| 1. | திரு. கே. ஏ. ஏ. டீ. ஜுட் பீட்டர்<br>உதவி வேலை முகாமையாளர் (பராமரிப்பு) | 2015.02.26 |
| 2. | திரு. எல். ஜீ. ஹேவாவிதாரண<br>முகாமையாளர் (செயல்முறை) | 2015.05.24 |
| 3. | திரு. ஏ. எஸ். சீ. சில்வா<br>உள்ளக கணக்காய்வாளர் | 2015.12.31 |

### அங்கீகரித்தல்

கூட்டுத்தாபனத்தின் சகல ஊழியர்களும் கூட்டுத்தாபனத்தை வெற்றிகரமாக நடத்துவதற்கு மனப்பூர்வமான ஒத்துழைப்பை தந்தமைக்காக தலைவரும், பணிப்பாளர்களும் நன்றி கூறுகிறார்கள்.

வெற்றிகரமான திட்டத்திற்கு வழிகாட்டுதலும் ஆதரவும் அளித்த கௌரவ பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் ஊடக அமைச்சருக்கும் திட்டத்தை அமுல் செய்வதில் தொடர்ச்சியான ஆதரவை தந்த அமைச்சின் செயலாளர்களுக்கும் ஊழியர்களுக்கும் தலைவரும், பணிப்பாளர்களும் நன்றி கூறுகின்றார்கள்.

எதிர்வரும் ஆண்டுகளில் இதே ஒத்துழைப்பு வழங்கப்படுமென்று முகாமைத்துவம் நம்புகிறது.

**ரவீந்திர யசலால் கலன்சூரிய**
தலைவர்

# 2015 ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான நிதி கூற்றுக்கள் பற்றிய கருத்துரை

## 1. கூட்டிணைப்பு பற்றிய தகவல்கள்

### 1.1 பொதுத் தகவல்

அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம் 1968 ஆம் ஆண்டு 24 ஆம் இலக்க பாராளுமன்ற சட்டத்தின் கீழ் 1968 ஆம் ஆண்டு கூட்டிணைக்கப்பட்டதுடன் கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவம் மற்றும் நிர்வாகம் பணிப்பாளர் சபையிடம் கையளிக்கப்பட்டது. இது பாதுக்க, பானலுவவில் அமைந்துள்ளது.

### 1.2 முக்கிய செயற்பாடுகளும் செயற்பாட்டின் தன்மையும்

கூட்டுத்தாபனத்தின் முக்கிய செயற்பாடுகளாக பாடசாலை பாடப்புத்தகங்களை அச்சிடுதல், பயிற்சிக் கொப்பிகளை தயாரித்தல் மற்றும் ஏனைய அச்சுப் பணிகள் என்பவற்றை குறிப்பிடலாம்.

## 2. தயாரிப்பின் அடிப்படை

1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்திற்கு இணைவாக LKAS மற்றும் SLFRS என்பவற்றிற்கு ஏற்ப நிதி நிலைமை கூற்றுக்கள், விரிவான வருமான கூற்று, நிதி மாற்றங்கள் மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுக்கள், கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

### 2.1 மதிப்பீட்டு அடிப்படை

நிதிக்கூற்றுக்கள் திரட்டல் முறை மற்றும் தொன்மை கிரய அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன. நிதிக்கூற்றுக்கள் இலங்கை ரூபாவில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

### 2.2 நிறுவன தொடர்ச்சி

கூட்டுத்தாபனம் தொடர்ந்து இயங்கும் ஆளுமையை கொண்டுள்ளதா என்பதை கருத்திற்கொண்டு பணிப்பாளர் சபை மதிப்பீடு செய்துள்ளதுடன் முடிவுறுத்துவதோ அல்லது செயற்பாடுகளை நிறுத்துவதோ சபையின் நோக்கமல்ல.

# 3. சிறப்பான கணக்கீட்டு கொள்கைகளின் சுருக்கம்

## 3.1 சொத்து, பொறி மற்றும் இயந்திரங்கள்

சொத்து, பொறி மற்றும் இயந்திரங்கள் தேய்மான சேர்க்கப்பட்ட தேறிய கிரயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

**முழுமையாக தேய்மானம் செய்யப்பட்ட சொத்துக்கள் இன்னும் பாவனையில் உள்ளன.**

| சொத்து பிரிவு | மொத்த கிரயம் (ரூ.) | முழுமையாக தேய்மானம் செய்யப்பட்ட சொத்தின் பெறுமதி (ரூ.) | மொத்த சொத்தின் பெறுமதியில் முழுமையாக தேய்மானம் செய்யப்பட்ட சொத்தின் பெறுமதி % |
|---|---|---|---|
| கட்டிடங்கள் | 38,020,440.00 | 6,683,778.00 | 18% |
| பொறிகளும் இயந்திரங்களும் | 236,452,325.00 | 128,705,002.00 | 54% |
| தளபாடங்களும் பொருத்துகைகளும் | 4,410,226.00 | 3,519,360.00 | 80% |
| மோட்டார் வாகனங்கள் | 45,807,299.00 | 20,746,499.00 | 45% |
| அலுவலக தளபாடங்கள் | 31,450,774.00 | 10,887,819.00 | 35% |
| மின்னியல் மீள் பொருத்துகைகளும் | 2,572,951.00 | 2,572,951.00 | 100% |
| கணினி மென்பொருள் | 35,793,321.00 | 26,918,031.00 | 75% |

2015. 12. 31 இல் உள்ளவாறு மேற்குறிப்பிட்டவாறு தொகுக்கப்பட்ட சொத்துக்களின் எஞ்சிய ஆயுட்காலம் மதிப்பீடு செய்யப்பட்டதுடன் சரியான கணக்கீட்டு சீராக்கலுக்காக முறையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

### 3.1.1 தேய்மானம்

மதிப்பீடு செய்யப்பட்ட சொத்து, பொறிகள் மற்றும் இயந்திரங்களின் பயன்தகு ஆயுட்காலம் மீது நேரடி தேய்மான அடிப்படையில் தேய்மானம் கணக்கிடப்படும்.

நிகழ் மற்றும் ஒப்பீட்டு ஆண்டுகளுக்கான மதிப்பிடப்பட்ட பயனுள்ள ஆயுட்காலம் பின்வருமாறு:

| | |
|---|---|
| கட்டிடங்கள் | 40 வருடங்கள் |
| பொறிகளும் இயந்திரங்களும் | 13.33 வருடங்கள் |
| மோட்டார் மற்றும் ஏனைய வாகனங்கள் | 4 வருடங்கள் |
| தளபாடங்களும் பொருத்துகைகளும் | 10 வருடங்கள் |
| அலுவலக தளபாடங்கள் | 10 வருடங்கள் |
| கணினிகள் மற்றும் உதிரிப்பாகங்கள் | 3 வருடங்கள் |
| தொழிற்சாலை உபகரணங்கள் | 4 வருடங்கள் |

## 3.2 பொருட் பட்டியல்

பொருட்பட்டியலானது குறைந்த கிரயம் மற்றும் தேறிய அட்டுறு பெறுமதியில் கணிப்பிடப்பட்டுள்ளது.

## 3.3 வரிவிதிப்பு

2006 ஆம் ஆண்டு 10 இலக்க உந்நாட்டு இறைவரி சட்டத்தின் பிரகாரம் பொறுப்பு முறை அடிப்படையில் வரிவிதிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 3.4 காசும் காசுக்கு சமமானவைகளும்

# 4. நிதி கருவிகள் - ஆரம்ப அங்கீகாரம் மற்றும் தொடர்ச்சியான அளவீடு

### 4.1 நிதிச் சொத்துக்கள்

#### 4.1.1 நிதிச் சொத்துக்களின் சேதம்

(a) 2.5 வியாபார வருமதிகளில் காட்டப்பட்டுள்ளன.

**4.1.1** (b) குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் இதுவரை விநியோகிக்கப்பட்டிராத முழு பாடப்புத்தகங்களுக்கு கல்வி வெளியீட்டுத் திணைக்களத்திடமிருந்து பெற வேண்டிய வருமதிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கடந்த 5 வருடங்களில் ஏற்பட்ட தாமதங்களை அடிப்படையாகக் கொண்டு கல்வி வெளியீட்டுத் திணைக்களம் சராசரி அபராதத் தொகையை விதித்தது.

### 4.2 நிதி பொறுப்புக்கள்

காணி, கட்டிடங்கள் மற்றும் நிலையான இயந்திரங்களை ஈடாக வைத்து மக்கள் வங்கியிடமிருந்து கடன் அடிப்படையில் பெறப்பட்ட நிதி மூலம் கூட்டுத்தாபனத்தில் நடைமுறையில் உள்ளது.

கடந்த காலத்திற்கான ஊழியர் நம்பிக்கை நிதியம் தொடர்பான தண்டக் கட்டணம் பொறுப்பாக காணப்படுகிறது.

#### 4.2.1 ஐயப்பாட்டு பொறுப்பு

தொழில் நியாய சபையின் தீர்மானங்களுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட 7 மேன்முறையீடு தொடர்பான ஐயப்பாட்டுப் பொறுப்பு காணப்படுகிறது. கொழும்பு உயர் நீதிமன்றம் 17 மேன்முறையீடுகள், 3 முறைப்பாடுகள் மாவட்ட நீதிமன்றங்களுக்கும் ஒரு முறைப்பாடு மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்குமானது.

# 5. ஓய்வு பயன் பொறுப்புறுதிகள்

1983 ஆம் ஆண்டு 12 இலக்க பணிக்கொடை கொடுப்பனவு பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனம் பணிக்கொடையை செலுத்த வேண்டிய பொறுப்பை கொண்டுள்ளது. 2015. 12. 31 இல் உள்ளவாறு ஏற்பாடுகளுக்கு இணையான தனி நிதியம் திரட்டப்படாத போதும் பணிக்கொடை கொடுப்பனவு நிலுவை இன்றி செலுத்தப்பட்டது.

# 6. வருமானமும் செலவினங்களும்

### 6.1 வருமான அங்கீகாரம்

சகல வருமானமும் தொன்மை கிரய அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

**வட்டி வருமானம்**

கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட கடன்களுக்கு 10% வட்டி அறவிடப்பட்டுள்ளது.

### 6.2 செலவினங்கள்

ஆண்டில் ஈட்டப்படும் இலாபத்தில் வியாபாரத்தை நடத்துவதற்கு ஏற்கப்பட்ட சகல செலவினங்களும் குறைக்கப்பட்டுள்ளன.

### 6.3 கடன் பெறுவதற்கான கிரயம்

ஏற்கப்பட்ட காலப்பகுதியில் ஏற்பட்ட சகல கடன் பெறுவதற்கான கிரயங்களும் செலவினங்களாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

# அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்
# 2015ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான நிதி கூற்றுக்கள் பற்றிய கருத்துரை

| | குறிப்பு | 2015<br>ரூ. | 2014<br>ரூ. |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| நடைமுறை அல்லாத சொத்துக்கள் | | | |
| சொத்து, பொறி மற்றும் உபகரணங்கள் | 15 | 99,679,966 | 93,143,946 |
| | | **99,679,966** | **93,143,946** |
| **நடைமுறைச் சொத்துக்கள்:** | | | |
| பொருட்பட்டியல்கள் | 16 | 359,962,298 | 374,745,859 |
| வியாபார வருமதிகள் | 17 | 656,995,640 | 789,934,471 |
| ஏனைய வருமதிகள் | 18 | 183,534,351 | 165,575,584 |
| முற்பண கொடுப்பனவு | | 263,396 | 11,704 |
| காசும் காசுக்கு சமமானவையும் | 19 | 33,542,417 | 5,425,708 |
| | | 1,234,298,102 | 1,335,693,326 |
| **மொத்த சொத்துக்கள்** | | **1,333,978,068** | **1,428,837,272** |
| **ஒப்புரவுகளும் பொறுப்புக்களும்** | | | |
| வெளியிடப்பட்ட மூலதனம் | | 15,000,000 | 15,000,000 |
| ஒதுக்கங்கள் | | 15,003,633 | 15,003,633 |
| இருப்பு வருமானங்கள் | | 312,036,107 | 321,839,104 |
| மொத்த ஒப்புரவுகள் | | **342,039,740** | **351,842,737** |
| **நடைமுறை அல்லாத பொறுப்புக்கள்** | | | |
| ஓய்வு பயன் பொறுப்புறுதிகள் | | 183,734,742 | 151,387,409 |
| கடன் பெறுவனவுகளுக்கான வட்டி | | - | - |
| தண்டத்திற்கான முண்னேற்பாடு | | - | 23,449,201 |
| | | **183,734,742** | **174,836,610** |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | |
| வியாபார சென்மதிகள் | 20 | 253,548,518 | 338,137,042 |
| ஏனைய சென்மதிகள் | 21 | 36,594,068 | 32,346,639 |
| கடன் பெறுவனவுகளுக்கான வட்டி | | 469,813,626 | 494,970,217 |
| வங்கி மேலதிகப் பற்று | | 48,247,374 | 36,704,028 |
| மொத்த பொறுப்புக்கள் | | 808,203,586 | 902,157,926 |
| மொத்த ஒப்பரவுகளும் பொறுப்புக்களும் | | **1,333,978,068** | **1,428,837,272** |

இந்நிதிக்கூற்றுக்கள் 1971 ஆம் ஆண்டு 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் தேவைகளுக்கு இணைவாக உள்ளதென இத்தால் சான்றுப்படுத்துகின்றேன்.

.......................................

என். டி. பிரியன்கர குமார
நிதி முகாமையாளர்

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல் தொடர்பில் பணிப்பாளர் சபை பொறுப்பேற்க வேண்டும். இந்நிதிக்கூற்றுக்கள் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டு அவர்கள் சார்பாக கைச்சாத்திடப்பட்டுள்ளன. பக்கம் 67, 68, 69 ஆகியவற்றிலுள்ள நிதிக் கொள்கைகள், பக்கம் 71, 72 மற்றும் 76 தொடக்கம் 78 வரையிலான படிவங்கள் நிதிக்கூற்றுக்களுடன் ஒருங்கிணைந்த பகுதியாக காட்டப்பட்டுள்ளன.

.......................................
**ரவீந்திர யசலால் கலன்சூரிய**
**தவிசாளர்/பணிப்பாளர்**

.......................................
**நெனசேன ஆதிஹெட்டி**
**வேலை பணிப்பாளர்**

## அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்
## 2015ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதியில்
## உள்ளவாறான நிதி கூற்றுக்கள் பற்றிய கருத்துரை

| | 2015 | 2014 |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| **16. பொருட்பட்டியல்கள்** | | |
| மூலப்பொருட்கள் | 201,427,934 | 242,489,191 |
| பாவனைப்பொருட்கள் | 4,361,638 | 4,557,130 |
| உதிரிப்பாகங்கள் | 38,664,242 | 36,680,545 |
| கட்டுமானப்பொருட்கள் | 1,615,946 | 500,029 |
| முடிவுப்பொருட்கள் | 74,921,195 | 59,872,687 |
| உற்பத்தியாகும் பொருட்கள் | 38,971,343 | 30,646,277 |
| | **359,962,298** | **374,745,859** |

| | 2015 | 2014 |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| 17. வியாபார பெறுவனவுகள் | | |
| வியாபார கடன்படுநர் | 673,119,568 | 809,256,090 |
| கழிக்க – அறிவிட முடியாக்கடன் ஏற்பாடு | (16,827,989) | (20,231,402) |
| ஏனைய கடன்கொடுநர் | 704,061 | 909,782 |
| | **656,995,640** | **789,934,471** |

| | 2015 | 2014 |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| 18. ஏனைய பெறுவனவுகள் | | |
| பணியாட்தொகுதி கடன் மற்றும் முற்பணம் (குறிப்பு 18.1) | 18,533,893 | 20,964,497 |
| வைப்புக்கள் மற்றும் பெறுவனவுகள் (குறிப்பு 18.2) | 2,940,778 | 5,746,572 |
| விற்பனை கட்டுப்பாட்டு கணக்குகள் | 1,359 | (1,443,477) |
| வங்கி கடன் - தொங்கல் கணக்கு | 162,058,321 | 140,307,992 |
| | **183,534,351** | **165,575,584** |

| | 2015 | 2014 |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| 18.1 பணியாட்தொகுதி கடன் மற்றும் முற்பணம் | | |
| கடன்கொடுநர் முற்பண கணக்கு | 1,920,140 | 1,521,556 |
| இடர் கடன்கள் | 14,294,108 | 16,193,582 |
| பண்டிகை முற்பணம் | 2,236,000 | 2,756,413 |
| பணியாட்தொகுதி சம்பள முற்பணம் | 83,645 | 492,945 |
| | **18,533,893** | **20,964,497** |

| | 2015 | 2014 |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| 18.2 வைப்புக்களும் பெறுவனவுகளும் | | |
| வைப்புக்கள் பெறுவனவுகள் | 2,406,142 | 5,193,075 |
| சேர்க்க. ஏனைய பெறுவனவுகள் | 534,636 | 553,497 |
| | **2,940,778** | **5,746,572** |

| | | |
|---|---|---|
| 19. காசும் காசுக்கு சமமானவைகளும் | | |
| வங்கியிலுள்ள காசு | 26,669,359 | 2,214,824 |
| வழியிடைப்பணம் | 6,774,493 | 3,129,182 |
| கையிலுள்ள காசு | 98,565 | 81,702 |
| | **33,542,417** | **5,425,708** |

காசுப்பாய்ச்சல், காசும் காசுக்கு சமமானவைகள் கூற்றின் பயன்பாட்டிற்காக பின்வருவன உள்ளடக்கப்படுகின்றன.

| | 2015 | 2014 |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| வங்கியிலுள்ள காசு | 26,669,359 | 2,214,824 |
| வழியிடைப்பணம் | 6,774,492 | 3,129,182 |
| கையிலுள்ள காசு | 98,565 | 81,702 |
| | 33,542,416 | 5,425,708 |
| வங்கி மேலதிகப்பற்று | (48,247,374) | (36,704,028) |
| | **(14,704,958)** | **(31,278,320)** |

| | 2015 | 2014 |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| 20. வியாபார கொடுப்பனவுகள் | | |
| வியாபார கடன்கொடுநர் | 53,840,285 | 59,781,032 |
| கடன்கொடுநர் முற்பண கணக்கு | 1,076,244 | 77,517,303 |
| ஏனைய கடன்கொடுநர் | 198,618,612 | 200,835,799 |
| உந்நாட்டு இறைவரித்திணைக்களம் | 13,377 | 2,909 |
| விற்பனை முற்பணம் | **253,548,518** | **338,137,042** |

| | 2015 | 2014 |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| 21. ஏனைய கொடுப்பனவுகள் | | |
| திரண்ட செலவு | 35,878,568 | 29,969,046 |
| வைப்பு கொடுப்பனவு | 715,500 | 2,377,593 |
| | **36,594,068** | **32,346,639** |

# அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்
# 2015ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான நிதி கூற்றுக்கள் பற்றிய கருத்துரை

| | 2015 | 2014 |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| செயற்பாட்டு நடவடிக்கைகளினால் காசுப்பாய்ச்சல் | 2,932,478 | 71,153,661 |
| வரிக்கு முந்திய தேறிய இலாபம்/நட்டம் | | |
| செம்மையாக்கலுக்காக: | | |
| நிலையான சொத்துக்கள் மீதான தேய்மானம் | 18,817,930 | 16,428,062 |
| முந்திய வருட செம்மையாக்கல் | 63,950,712 | 86,702,069 |
| நிதிச் செலவினங்கள் | 51,637,119 | 67,498,596 |
| வருடம் முழுவதும் பணிக்கொடை ஏற்பாடு | 42,083,872 | 26,774,796 |
| **தொழிற்படு மூலதன மாற்றத்துக்கு முந்திய செயற்பாட்டு இலாபம்** | **179,422,111** | **268,557,184** |
| தொழிற்படு மூலதன விடயங்களின் மாற்றம் | | |
| (அதிகரிப்பு) பொருட் பட்டியல்களில் குறைப்பு | 14,783,561 | (66,899,253) |
| (அதிகரிப்பு) வியாபார மற்றும் ஏனைய பெறுவனவுகளின் குறைப்பு | 132,938,831 | (56,654,226) |
| (அதிகரிப்பு)/ஏனைய பெறுவனவுகளின் குறைப்பு | (17,958,767) | (22,429,821) |
| அதிகரிப்பு/நடைமுறை பொறுப்புக்களின் (குறைப்பு) | (80,341,095) | (5,141,550) |
| செயற்பாடுகளின் மூலம் ஈட்டப்பட்ட காசு | **228,844,641** | **(151,124,850)** |
| செலுத்திய வரி | (100,805,045) | (75,896,011) |
| செலுத்திய ஊழியர் ஓய்வு கொடை | (9,736,539) | (4,798,335) |
| செயற்பாடுகளின் காசுப்பாய்ச்சல்கள் | **118,303,057** | **36,737,988** |
| முதலீட்டு செயற்பாடுகளின் காசுப்பாய்ச்சல்கள் | | |
| பிபிஈ கொள்வனவு | (24,935,984) | (9,588,804) |
| முதலீட்டு செயற்பாடுகளின் தேறிய காசுப்பாய்ச்சல்கள் | **(24,935,984)** | **(9,588,804)** |
| நிதிச் செயற்பாடுகளின் காசுப்பாய்ச்சல்கள் | | |
| கடன்பெறுவனவுகளுக்கான பெறுவனவுகள்/செலுத்துகை | (25,156,591) | 50,882,817 |
| செலுத்திய வட்டி | (51,637,119) | (67,498,596) |
| முதலீட்டு செயற்பாடுகளின் தேறிய காசுப்பாய்ச்சல்கள் | **(76,793,710)** | **(16,615,780)** |
| காசும் காசுக்கு சமமானவைகளின் தேறிய அதிகரிப்பு (குறைப்பு) | **16,573,363** | **10,533,405** |
| தவணை ஆரம்பத்தில் காசும் காசுக்கு சமமானவைகள் | **(31,278,320)** | **(41,811,725)** |
| தவணை இறுதியில் காசும் காசுக்கு சமமானவைகள் (குறிப்பு 19) | **(14,704,957)** | **(31,278,320)** |

## அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்
## 2015ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான நிதி கூற்றுக்கள் பற்றிய கருத்துரை

| | வெளியிட்ட மூலதனம் | மூலதன ஒதுக்கம் | பொது ஒதுக்கம் | அபிவிருத்தி ஒதுக்கம் | இருப்பு வருமானம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. |
| 2014 ஜனவரி 01 உள்ளவாறு மீதி | 15,000,000 | 102,491 | 1,000,000 | 13,901,142 | 283,100,175 | 313,103,808 |
| ஆண்டுக்குரிய இலாபம் / நட்டம் | - | - | - | - | (2,791,741) | (2,791,741) |
| முந்திய வருட செம்மையாக்கல் | - | - | - | - | 41,530,670 | 41,530,670 |
| 2014 டிசம்பர் 03 உள்ளவாறு மீதி | 15,000,000 | 102,491 | 1,000,000 | 13,901,142 | 321,839,104 | 351,842,737 |
| 2015 ஜனவரி 01 உள்ளவாறு மீதி | **15,000,000** | **102,491** | **1,000,000** | **13,901,142** | **321,839,104** | **351,842,737** |
| ஆண்டுக்குரிய இலாபம் / நட்டம் | | | | | (11,914,381) | (11,914,381) |
| முந்திய வருட செம்மையாக்கல் | | | | | 2,111,384 | 2,111,384 |
| 2015 டிசம்பர் 31 உள்ளவாறு மீதி | **15,000,000** | **102,491** | **1,000,000** | **13,901,142** | **312,036,107** | **342,039,740** |

## அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்
## 2015ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான விரிவான வருமானக் கூற்றுக்கள்

| | குறிப்புக்கள் | 2015<br>ரூ. | 2014<br>ரூ. |
|---|---|---|---|
| வருமானம் | 7 | 1,300,518,508 | 1,334,036,310 |
| விற்பனை செலவு | 8 | (919,270,372) | (878,824,960) |
| மொத்த இலாபம் | | 381,248,136 | 455,211,350 |
| ஏனைய செயற்பாட்டு வருமானம் | 9 | 25,810,856 | 8,280,234 |
| விநியோக செலவினம் | 10 | (20,637,877) | (28,652,368) |
| நிர்வாக செலவினம் | 11 | (221,422,756) | (199,688,025) |
| ஏனைய செயற்பாட்டு செலவினம் | 12 | (113,405,494) | (98,257,868) |
| செயற்பாட்டு இலாபம் | | 51,592,865 | 136,893,323 |
| நிதி வருமானம் | | 2,976,732 | 1,758,935 |
| நிதி செலவினம் | 13 | (51,637,119) | (67,498,596) |
| வரிக்கு முந்திய இலாபம் | | 2,932,478 | 71,153,661 |
| வருமான வரி | 14 | (821,094) | (29,622,991) |
| வரிக்கு பிந்திய இலாபம் | | **2,111,384** | **41,530,670** |

## 2015ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான விரிவான வருமானக் கூற்றுக்கள்

| | **2015**<br>ரூ. | **2014**<br>ரூ. |
|---|---|---|
| **ஆண்டுக்குரிய இலாபம்** | 2,111,384 | 41,530,669.92 |
| **ஏனைய விரிவான வருமானம்** | - | - |
| **ஆண்டுக்குரிய மொத்த விரிவான வருமானம்** | 2,111,384 | 41,530,669.92 |

## அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்
## 2015ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதியில்
## உள்ளவாறான நிதி கூற்றுக்கள் பற்றிய கருத்துரை

| | 2015 | 2014 |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| 07. வருமானம் | | |
| காகிதாதிகள் தொழிற்சாலையின் வருமானம் | 226,772,430 | 231,584,796 |
| பிரதான அச்சக வருமானம் | | |
| பாடப்புத்தகங்கள் | 776,607,507 | 642,847,478 |
| தொழில்கள் | 281,879,226 | 440,729,338 |
| வெளியீடு | 284,071 | 218,382 |
| ஏனைய விற்பனை வருமானம் | 14,975,274 | 18,656,316 |
| | **1,300,518,508** | **1,334,036,310** |

| | 2015 | 2014 |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| 08. விற்பனைச் செலவு | | |
| பிரதான அச்சகம் | | |
| உபயோகித்த மூலப்பொருள் | 405,558,049 | 429,959,088 |
| நேரடி உழைப்பு | 193,528,470 | 157,912,108 |
| நேரடி தொழிற்சாலை செலவு | 43,374,471 | 47,222,425 |
| ஏனைய தொழிற்சாலை செலவு | 56,591,381 | 54,418,700 |
| ஏனைய செலவுகள் | 30,289,749 | 10,602,024 |
| | **729,342,120** | **700,114,344** |
| காகிதாதி தொழிற்சாலை | | |
| உபயோகித்த மூலப்பொருள் | 154,175,405 | 122,825,306 |
| நேரடி உழைப்பு | 29,313,230 | 22,365,113 |
| நேரடி தொழிற்சாலை செலவு | 3,467,847 | 4,048,854 |
| ஏனைய தொழிற்சாலை செலவு | 2,144,242 | 1,941,292 |
| ஏனைய செலவுகள் | 14,205,944 | 19,345,014 |
| | **174,894,780** | **170,525,579** |
| வெளியீட்டு பகுதியின் செலலு | 393,071 | 225,934 |
| ஏனைய பகுதிகளின் செலவுகள் | 14,640,401 | 7,959,103 |
| மொத்த விற்பனைச் செலவு | **919,270,372** | **878,824,960** |

| | 2015 | 2014 |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| 09. ஏனைய பராமிரப்பு வருமானம் | | |
| ஏனைய வருமானங்கள் | 21,834,295 | 7,498,651 |
| கேள்விப்பத்திர வைப்பு | 599,898 | 781,583 |
| | **3,376,663** | **-** |
| | **25,810,856** | **8,280,234** |

| | 2015 | 2014 |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| 10. விநியோகச் வெலவு | | |
| பொருளாதார சேவை கட்டணம் | - | 3,260,748 |
| தேசிய கட்டிட வரி | 15,728,306 | 14,728,700 |
| மோட்டார் வாகன பராமரிப்புச்செலவு | 3,270,284 | 4,461,840 |
| அறவிட முடியாக்கடன் ஏற்பாடு | - | 1,466,210 |
| விளம்பரம் | 841,008 | 1,453,619 |
| விற்பனை மேம்படுத்தல் | 417,380 | 3,270,984 |
| விற்பனை நிலைய பராமரிப்பு | 134,391 | 10,267 |
| விற்பனை கழிவு | 246,508 | - |
| | **20,637,877** | **28,652,368** |

| | | 2015 | 2014 |
|---|---|---|---|
| | | ரூ. | ரூ. |
| 11. | நிர்வாக செலவினங்கள் | | |
| | வாடகை | 2,715,898 | 3,059,629 |
| | காணி, கட்டிட நிர்வாகம் | 1,035,120 | 2,327,238 |
| | மின்சாரம் | 167,242 | 195,470 |
| | அலுவலக தளபாட பராமரிப்பு | 310,947 | 432,232 |
| | தேய்மானம் - அலுவலக தளபாடம் | 1,975,002 | 1,804,769 |
| | - தளபாடமும் பொருத்துகைகளும் | 86,863 | 91,188 |
| | - கணினி மென்பொருள் | 2,378,768 | 1,287,337 |
| | - மோட்டார் சைக்கிள்கள் | 34,507 | - |
| | விகிதங்கள் | 26,623 | 78,052 |
| | நீர் வரி | 38,363 | 49,426 |
| | சம்பளங்களும் படிகளும் | 124,994,160 | 106,717,208 |
| | ஊழியர் மேலதிக நேரம் | 7,052,677 | 10,370,043 |
| | ஊழியர் சேமலாப நிதி | 16,227,899 | 14,264,339 |
| | ஊழியர் நம்பிக்கை நிதி | 4,056,979 | 3,565,357 |
| | ஊக்குவிப்பு கொடுப்பனவுகள் | 2,392,750 | 2,540,610 |
| | | 812,065 | 690,000 |
| | தவிசாளர் ஊதியம் | 510,919 | - |
| | பிரதி தவிசாளர் ஊதியம் | - | 458,347 |
| | பணிப்பாளர் சபை கட்டணங்கள் | 213,100 | 288,000 |
| | தபால் செலவு | 340,305 | 178,089 |
| | தொலைபேசி | 1,239,368 | 1,526,887 |
| | அறிவித்தல் மற்றும் வெளியீடுகளை அச்சிடல் | 92,170 | - |
| | போக்குவரத்துச் செலவு மற்றும் இதர கொடுப்பனவு | 1,393,337 | 1,609,818 |
| | பத்திரிகை மற்றும் சஞ்சிகைகள் | 89,020 | 66,910 |
| | வெளிநாட்டு சுற்றுப்பயணம்/ஊழியர் பயிற்சி (வெளிநாட்டு) | 672,559 | 3,038,518 |
| | இணையதளம்/மின்னஞ்சல் | 80,287 | 412,164 |
| | அச்சிடலும் காகிதாதிகளும் | 3,916,882 | 4,733,025 |
| | கணக்காய்வு கட்டணம் | - | - |
| | களியாட்டம் | 256,266 | 366,964 |
| | சட்ட மற்றும் ஆலோசனை சேவை | 320,719 | 596,557 |
| | மோட்டார் வாகன பராமரிப்பு 25% | 3,270,284 | 4,461,840 |
| | பொது அலுவலக செலவினங்கள் | 355,357 | 2,816,822 |
| | இதர செலவினங்கள் | 102,612 | 76,250 |
| | பணிக்கொடை செலவினங்கள் | 42,083,872 | 26,774,796 |
| | கேள்வி பத்திர சபை தொழில்நுட்ப கட்டணங்கள் | 419,000 | 702,550 |
| | காசு மெய்ப்பாதுகாவலர் கட்டணங்கள் | 14,250 | 33,000 |
| | உறுப்பினர் கட்டணங்கள் | 36,100 | 37,500 |
| | ஊழியர் பயிற்சி | 242,100 | 597,850 |
| | தங்குமிடம் | 13,780 | 254,591 |
| | பணிப்பாளர் சபை கூட்ட செலவினங்கள் | 30,667 | 259,268 |
| | நன்கொடை | 335,854 | 1,781,697 |
| | வாடகை – மோட்டார் சைக்கிள் | 443,960 | 1,044,686 |
| | விற்பனை ஆய்வு கட்டணங்கள் | - | - |
| | காசு போக்குவரத்துக் கட்டணங்கள் | 69,675 | - |
| | கணினி பணியக சேவை கட்டணங்கள் | 441,450 | - |
| | | 133,000 | 99,000 |
| | | **199,688,025** | **185,818,554** |

| | | 2015 | 2014 |
|---|---|---|---|
| | | ரூ. | ரூ. |
| 12. | ஏனைய செயற்பாட்டு செலவினங்கள் | | |
| | ஊழியர் சேமநலன் | 24,702,769 | 27,015,994 |
| | ஊழியர் மருத்துவ திட்டம் | 6,017,920 | 4,855,939 |
| | வீட்டுக்கடன் வட்டி | 4,938,620 | 4,935,271 |
| | ஊழியர் வெகுமதி | 50,660,006 | 40,723,833 |

| | | |
|---|---|---|
| விசேட ஊக்குவிப்பு கொடுப்பனவு | 6,700,000 | 3,408,170 |
| ஊழியர் போக்குவரத்து | 2,595,233 | 3,274,388 |
| விடுமுறை கொடுப்பனவு | 16,937,575 | 13,051,103 |
| செலுத்துனர் வரி | 853,371 | 993,171 |
| | **113,405,494** | **98,257,868** |

| | 2015 | 2014 |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| 13. வருமான செலவினங்கள் | | |
| வங்கி கட்டணங்கள் | 6,650,376 | 8,640,167 |
| வங்கி மேலதிகப்பற்று வட்டி | 1,429,507 | 4,700,100 |
| வங்கி கடன் வட்டி – குறுகிய காலம் | 43,557,236 | 53,633,209 |
| வங்கி கடன் வட்டி – நீண்ட காலம் | - | 525,121 |
| தண்டப்பணம் கட்டணங்கள் | - | - |
| | **51,637,119** | **67,498,596** |

| | 2015 | 2014 |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| 14. வருமான வரி | | |
| ஆண்டுக்குரிய வருமான வரி ஏற்பாடு | 821,094 | 27,259,607 |
| பங்கிலாப கருதுகைகள் மீதான வரி ஏற்பாடு | - | 2,363,384 |
| | **821,094** | **29,622,991** |

# அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்
# 2015 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான நிதி கூற்றுக்கள் பற்றிய கருத்துரை

15. சொத்து, தொழிற்சாலை மற்றும் உபகரணங்கள்

| விபரம் | 31. 12. 2014 உள்ளவாறு | ஆரம்ப நிலுவை வித்தியாசம் | ஆண்டின் சேர்த்தல்கள் / மீள்பெறுமதியிடல்கள் | ஆண்டின் வெளியேற்றங்கள் | 31. 12. 2014 உள்ளவாறு | ஆரம்ப நிலுவை வித்தியாசம் | சேர்த்தல் | ஆண்டின் வெளியேற்றங்கள் | 31.12.2015 உள்ளவாறு |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| கிரயத்தில் | | | | | | | | | |
| காணி | 475,126 | - | - | - | 475,126 | - | - | - | 475,126 |
| கட்டிடம் | 37,182,060 | - | 838,380 | - | 38,020,440 | - | - | - | 38,020,440 |
| தொழிற்சாலை மற்றும் இயந்திரங்கள் | 215,074,631 | - | 2,168,898 | - | 217,243,529 | - | 19,208,796 | - | 236,452,325 |
| தளபாடங்கள் மற்றும் பொருத்துகைகள் | 4,336,576 | - | - | - | 4,336,576 | - | 73,650 | - | 4,410,226 |
| அலுவலக தளபாடங்கள் | 27,988,509 | - | 1,128,013 | - | 29,116,522 | - | 2,334,252 | - | 31,450,774 |
| தொழிற்காலை கருவிகள் வகைகள் | 1,934,576 | - | 30,179 | - | 1,964,755 | - | 250,331 | - | 2,215,086 |
| இலத்திரனியல் மீள் உள்ளீடுகள் | 2,572,951 | - | - | - | 2,572,951 | - | - | - | 2,572,951 |
| மோட்டார் மற்றும் ஏனைய வாகனங்கள் | 48,397,096 | - | - | - | 48,397,096 | (2,839,797) | 250,000 | - | 45,807,299 |
| கணினி, பாகங்கள் | 27,551,031 | - | 5,423,335 | - | 32,974,366 | - | 2,818,955 | - | 35,793,321 |
| **மொத்தம்** | **365,512,556** | **-** | **9,588,805** | **-** | **375,101,361** | **(2,839,797)** | **24,935,984** | **-** | **397,197,548** |
| திரட்டிய தேய்மானம் கட்டிடம் | 27,444,058 | - | 783,417 | - | 28,227,475 | - | 783,417 | - | 29,010,892 |
| தொழிற்சாலை மற்றும் இயந்திரங்கள் | 159,635,834 | - | 6,565,954 | - | 166,201,788 | - | 7,695,826 | - | 173,897,614 |
| தளபாடங்கள் மற்றும் பொருத்துகைகள் | 3,741,128 | - | 91,188 | - | 3,832,316 | - | 86,863 | - | 3,919,179 |
| அலுவலக தளபாடங்கள் | 15,363,113 | - | 1,804,769 | - | 17,167,882 | - | 1,975,002 | - | 19,142,884 |
| தொழிற்சாலை கருவிகள், வகைகள் | 1,573,155 | - | 94,127 | - | 1,667,282 | - | 269,021 | - | 1,936,303 |
| இலத்திரனியல் மீள் உள்ளீடுகள் | 2,572,950 | - | - | - | 2,572,950 | - | - | - | 2,572,950 |
| மோட்டார் மற்றும் ஏனைய வாகணங்கள் | 29,913,788 | - | 4,778,107 | - | 34,691,895 | (3,257,762) | 4,855,369 | - | 36,289,502 |
| கணினி, பாகங்கள் | 25,285,326 | - | 2,310,500 | - | 27,595,826 | - | 3,152,432 | - | 30,748,258 |
| **மொத்தம்** | **265,529,352** | **-** | **16,428,062** | **-** | **281,957,414** | **(3,257,762)** | **18,817,930** | **-** | **297,517,582** |
| **எழுத்துப் பெறுமதி** | **99,983,204** | **-** | **-** | **-** | **93,143,947** | **417,965** | **6,118,054** | **-** | **99,679,966** |

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம
AUDITOR GENERAL'S DEPARTMENT

மගේ අංකය / எனது இல. / My No. எம்ஈடீ/டீ/எஸ்பீசீ/1/15/9 | ඔබේ අංකය / உமது இல. / Your No. | දිනය / திகதி / Date 2016 செப்தம்பர் 23

தலைவர்,
அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்.

**அரசாங்க அச்சக கூட்டுத்தாபனத்தின் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

அரசாங்க அச்சக கூட்டுத்தாபனத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளபடியான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய வெளிப்படுத்தல் தகல்வல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1968 இன் 24 ஆம் இலக்க அரசாங்க அச்சக கூட்டுத்தாபன அதிகாரச்சட்டத்தின் 23 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ்வறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கையொன்று கூட்டுத்தாபனத்தின் தலைவருக்கு 2016 ஆகஸ்ட் 25 ஆந் திகதி வழங்கப்பட்டது.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். உயர் கணக்காய்வு நிறுவனத்தின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000 – 1810) பின்பற்றி இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்திற்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து அரசாங்க அச்சக கூட்டுத்தாபனத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 01

கணக்கீட்டு நியமத்தின் மூலம் தேவைப்படுகின்ற அல்லது அனுமதியளிக்கப்பட்டவைகள் தவிர சொத்துக்களும் பொறுப்புக்களும் ஈடுசெய்யப்பட முடியாதிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதியில் அரச மற்றும் தனியார் துறைகளிலிருந்து அறவிடவேண்டிய ரூபா 499,251,402 தொகையான மொத்தக் கடன் மீதியில் ரூபா 4,409,866 மொத்த செலவு மீதி கழிக்கப்பட்டு ரூபா 494,841,536 தொகையான தேறிய கடன் மீதி மாத்திரம் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 02

இறுதியிருப்புக் கணிப்பீட்டின் போது கிரயம் அல்லது தேறிய தேறக்கூடிய பெறுமதி ஆகிய பெறுமதிகளில் குறைந்த பெறுமதி கணிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் இறுதியிருப்பில்

தேறக்கூடிய பெறுமதி தொடர்பான மதிப்பீடொன்று கூட்டுத்தாபனத்தால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) இலங்கை கணக்கீட்டு நியமம் 08

---

(i) கூட்டுத்தாபனத்தால் முன்னைய ஆண்டுகளுக்குரிய வழுக்களைத் திருத்துதல் பின்னொக்கி சீராக்கம் செய்து முன்னைய ஆண்டின் நிதி நிலையை மீண்டும் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதற்குப் பதிலாக உரிமை மூலதனங்கள் மாற்றக்கூற்றில் முன்னைய ஆண்டின் சீராக்கமாக ரூபா 11,914,381 தொகை காண்பிக்கப்பட்டிருந்ததுடன் அதற்குரிய தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பயன்படு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாமையின் காரணமாக கிரயம் ரூபா 200,033,440 தொகையான சொத்துக்கள் முழுமையாக பெறுமானத் தேய்விடப்பட்டிருந்த போதும் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டவாறிருந்தது. அதன் பிரகாரம் மதிப்பீடு செய்யப்பட்ட வழுக்களைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) இலங்கை கணக்கீட்டு நியமம் 16

---

காணி, கட்டிடம் மற்றும் இயந்திரங்களை பிணையாக வைத்து ரூபா 624,552,578 தொகையான கடன் தொகை பெறப்பட்டமை தொடர்பான விபரங்கள் மற்றும் அடகின் தன்மை தொடர்பான விபரங்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பாடசாலை பாடத்திட்ட புத்தகங்களை அச்சிட்டு குறித்த திகதியில் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்திற்கு கையளிக்கப்படாமையின் காரணமாக செலுத்த வேண்டிய தாமதக் கட்டணம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட ரூபா 28,496,348 தொகையான தாமதக் கட்டணத்திற்காக கணக்குகளில் நிதிஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கணிப்பிடல் வழுவின் காரணமாக ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபரகணங்களுக்காக மீளாய்வாண்டிற்கான ரூபா 1,586,947 பெறுமானத்தேய்வு குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) மொத்த வியாபாரக் கடன்பட்டோரில் 2.5 சதவீதம் கடன்பட்டோருக்கான சேதாரமாக ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், ஒட்டுமொத்த கடன்பட்டோரில் ரூபா 64,551,593 தொகை 5 வருடங்களை விஞ்சியிருந்தமையால் அதனை அறவிடமுடியாத நிலையொன்று காணப்படுகின்றமையால் ஒதுக்கப்பட்ட அளவு போதியளவாக இல்லாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 2.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் சேமிக்கப்பட்ட விடுமுறைகளுக்கான கொடுப்பனவு ரூபா 16,937,575 ஆக இருந்த போதிலும் பட்டோலைகளின் பிரகாரம் அந்த மீதி ரூபா 16,677,834 ஆனமையால் ரூபா 259,741 வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

### 2.2.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

பின்வரும் ஒவ்வொரு விடயங்களுக்கும் முன்னால் காண்பிக்கப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| | விபரம் | பெறுமதி<br>ரூபா | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|---|
| (அ) | வியாபாரக் கடன்பட்டோர் | 673,119,568 | கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கும் கடன்பட்டோர் தனிப்பட்ட கணக்குகளும் |
| (ஆ) | வியாபாரக் கடன்கொடுத்தோர் | 53,840,285 | மீதி உறுதிப்படுத்தல், கடன்கொடுத்தோர் தனிப்பட்ட கணக்குகள் மற்றும் கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்குகள் |
| (இ) | ஏனைய கடன்கொடுத்தோர் | 1,076,244 | பேரேட்டுக் கணக்குகளும் மீதி உறுதிப்படுத்தல்களும் |

## 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 673,119,568 தொகையான வியாபாரக் கடன்பட்டோர் மீதியில் 05 வருடங்களை விஞ்சிய ரூபா 64,551,594 கூட்டுத்தொகையாக நிலுவைக் கடன் மீதி காணப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு வியாபாரக் கடன்கொடுத்தோர் மீதி ரூபா 53,840,285 ஆக இருந்ததுடன் கடன்கொடுத்தோர் காலப்பகுப்பாய்வின் பிரகாரம் 2 வருடங்களுக்கும் 5 வருடங்களுக்கும் இடையே தீர்க்கப்படாத கடன்கொடுத்தோரின் பெறுமதி ரூபா 17,865,079 ஆக இருந்தது. இது மொத்தக் கடன்கொடுத்தோரில் 33 சதவீதமாகும்.

(இ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு தேசிய கடதாசிக் கம்பனியிலிருந்து ரூபா 9,753,427 தொகை அறவிடவேண்டியிருந்ததுடன் கூட்டுத்தாபனத்தால் கடதாசிக் கம்பனிக்குச் செலுத்தவேண்டிய பணம் ரூபா 7,460,675 ஆக இருந்தது. இந்தக்கடன் மீதியில் 02 வருடங்களை விஞ்சிய கடன் தொகை முறையே ரூபா 7,989,976 மற்றும் ரூபா 5,578,142 ஆக இருந்த போதிலும் இந்தக் கொடுக்கல் வாங்கல்களை இனங்கண்டு அந்த மீதிகளைத் தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைகள் கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) 2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதிசேர் வரி அதிகாரச்சட்டத்தின் 26(1) ஆம் உப பிரிவு | பெறுமதிசேர் வரித்தொகை வரியின் அடிப்படையில் வரி அறவிடக்கூடிய கால எல்லை முடிவடைந்ததன் பின்னர் அடுத்துவரும் மாதத்தின் இறுதித் தினத்திற்கு முன்னர் |

| | |
|---|---|
| | உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2012 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் இறுதி வரை ரூபா 35,230,511 கூட்டுத்தொகையான பெறுமதிசேர் வரி 2016 சனவரி 31 ஆந் திகதி வரையிலும் அனுப்பிவைக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2009 இன் 09 ஆம் இலக்க தேசத்தை கட்டியெழுப்புதல் வரி அதிகாரச் சட்டத்தின் 4 ஆம் பிரிவு | ஒவ்வொரு காலாண்டிற்கும் உரிய தேசத்தைக் கட்டியெழுப்பும் வரித்தொகை உரிய காலாண்டின் இறுதியின் பின்னர் அடுத்துவரும் மாதத்தின் இருபதாந் திகதிக்கு முன்னர் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2010 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை ரூபா 62,426,710 கூட்டுத்தொகையான தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அனுப்பி வைக்கப்பட்டிருக்க வில்லை. |
| (இ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.7 ஆம் பிரிவு | கூட்டுத்தாபனத்தின் உத்தியோகத்தரினால் மீளாய்வாண்டிற்காக செலுத்தவேண்டிய ரூபா 853,371 தொகையான உழைக்கும் போதே செலுத்தும் வரித்தொகை கூட்டுத்தாபன நிதியிலிருந்து செலுத்தப்பட்டிருந்தது. |

## 3. நிதி மீளாய்வு

----------------------------

### 3.1 நிதி விளைவுகள்

-------------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான கூட்டுத்தாபனத்தின் நிதி விளைவுகள் ரூபா 2,111,384 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 41,530,670 ஆனமையால் நிதி விளைவுகளில் ரூபா 39,419,286 தொகையான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் விற்பனை வருமானம் ரூபா 33,517,802 இனால் குறைவடைந்தமை நிதி விளைவிலான வீழ்ச்சிக்கு பிரதான காரணமாக இருந்தது.

மீளாய்வாண்டினதும் கடந்த 04 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்தபோது 2011 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரையும் மிகை ஏற்பட்டிருந்ததுடன் 2013 ஆம் ஆண்டு முதல் அது சீராகக் குறைவடைந்திருந்தது. எனினும், ஊழியர் பணிக்கொடை, அரச வரி மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றைக் கவனத்திற் கொள்ளும் போது 2011 ஆம் ஆண்டில் ரூபா 468,656,443 தொகையான கூட்டுத்தாபனத்தின் பங்களிப்பு தொடர்ச்சியாக அதிகரித்து 2015 ஆம் ஆண்டின்போது அது ரூபா 565,260,550 ஆக இருந்தது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மொத்த இலாப விகிதம் 34 சதவீதம் முதல் 29 சதவீதம் வரை குறைவடைந்திருந்ததுடன் கூட்டுத்தாபனத்தின் தேறிய இலாப விகிதம் 5 சதவீதம் முதல் 0.2 சதவீதம் வரை குறைவடைந்தமையால் கூட்டுத்தாபனத்தின் இலாபத்தன்மையில் வீழ்ச்சி நிலையொன்று அவதானிக்கப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டில் வரிக்கு முன்னரான இலாபம் வீழச்சியடைந்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் வட்டி மேவுகை விகிதம் 2.12 தடவை முதல் 1.1 தடவை வரை வீழ்ச்சியடைந்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

1968 இன் 24 ஆம் இலக்க அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபன அதிகாரச்சட்டம் மற்றும் அதன் பின்னர் அறிமுகப்படுத்தப்பட்ட திருத்தப்பட்ட அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் பொழிக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் நோக்கங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) அரசாங்கம் உள்ளூராட்சி நிறுவனங்கள், எழுத்துமூல சட்டத்தினால் கூட்டிணைக்கப்பட்ட அரசாங்க கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள், தனியார் நிறுவனங்கள் அல்லது தனிப்பட்டவர்களின் அச்சிடல் அல்லது வெளியீட்டுப் பணிகளை நிறைவேற்றுதல்.

(ஆ) காகிதாதிகள் மற்றும் ஏனைய தொடர்புடைய பொருட்களை உற்பத்தி செய்தல், இறக்குமதி செய்தல், ஏற்றுமதி செய்தல், கொள்வனவு செய்தல், விற்பனை செய்தல் போன்ற பணிகளுக்குப் பொறுப்பான இருத்தல்.

(இ) கூட்டுத்தாபனத்தினால் அல்லது இலங்கையில் ஏனைய நிறுவனங்களினால் அல்லது அச்சிடப்படுகின்ற அல்லது வெளியிடப்படுகின்ற புத்தகங்கள், கல்விசார் உசாத்துணை செய்திப்பத்திரிகைகள், சஞ்சிகைகள் மற்றும் ஏனைய வெளியீடுகளின் விற்பனை, பகிர்ந்தளித்தல், ஏற்றுமதி செய்தல் மற்றும் இறக்குமதி செய்தல் ஆகிய பணிகளுக்குப் பொறுப்பாக இருத்தல்.

## 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

---

முறையான சந்தைப்படுத்தல் திட்டமொன்று தயாரிக்கப்படாமல் காகிதாதி உற்பத்தி மேற்கொள்ளப்பட்டமையின் காரணமாக ரூபா 39,518,977 தொகையானது முன்னைய ஆண்டின் காகிதாதிகள் இருப்பிற்கு ஒப்பீடாக மீளாய்வாண்டின் காகிதாதிகள் இருப்பு ரூபா 17,648,818 இனால் அதாவது 44 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

## 4.3 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

---

சந்தை எதிர்வுகூறல் இன்றி உற்பத்தித் திட்டம் தயாரிக்கப்பட்டமையால் 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளின் போதும் உற்பத்தி செய்யப்பட்ட விற்பனை விலை ரூபா 4,770,110 தொகையான அப்பியாசக் கொப்பிகளின் இருப்பு 2016 சனவரி மாதம் வரையிலும் விற்பனை செய்யப்படாமல் இருந்ததுடன் தற்போது இந்தப் புத்தகங்கள் இருப்பு தரம் குறைவான நிலைக்கு உட்பட்டிருந்தது.

## 4.4 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

---

பழைய நிலுவைக் கடனை அறவிடுவதற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரமின்றி தரகுப் பணம் செலுத்தும் அடிப்படையில் கூட்டுத்தாபனத்தின் இரண்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். மீளாய்வாண்டின்போது பழைய கடன் நிலுவையை அறவிடுவதற்குப் பதிலாக 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளுக்குரிய கடன் அறவீடுகளுக்காக ரூபா 246,509 தரகுப் பணம் செலுத்தப்பட்டிருந்தது.

## 4.5 இனங்காணப்பட்ட நட்டம்

---

கூட்டுத்தாபனத்தின் புத்தகங்களையும் காகிதாதிகளையும் அச்சிடுவதற்குத் தேவையான கடதாசி இருப்புக்கள் உரிய பிரகாரம் களஞ்சியப்படுத்தப்படாமையினால் ரூபா 461,037 கிரயமான கடதாசி இருப்பொன்று

சேதத்துக்குள்ளாகி இருந்ததுடன் அந்த இருப்புக்கள் மீளாய்வாண்டின் போது ரூபா 93,756 இற்கு விற்பனை செய்யப்பட்டமையால் ரூபா 367,281 தொகையான நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.

### 4.6 ஏனைய அரசாங்க நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் வளங்கள்

முறையான கையளித்தலின்றி கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான காணியில் 13 ஏக்கர் 2 ரூட் 06 பேர்ச் அளவொன்று கைத்தொழில் அபிவிருத்தி சபைக்கு கையளிக்கப்பட்டிருந்தது.

### 4.7 பதவியணியினர் நிர்வாகம்

சந்தை மாற்றங்களை அவதானிப்பதற்காகவும் சந்தை ஆராய்ச்சியினை மேற்கொள்வதற்காகவும் சந்தை ஆராய்ச்சி உத்தியோகத்தர் ஒருவர் 2013 நவம்பர் 01 திகதி நியமிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின்போது எவ்வித சந்தைப்படுத்தல் ஆராய்ச்சிகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்களிப்புப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீடு செய்யப்பட்ட செலவினத்தை உள்ளபடியான செலவினத்துடன் ஒப்பீடு செய்த போது 36 செலவின விடயங்களில் 20 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையிலான வீச்சில் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

காசேட்டை நாளதுவரையாக சமப்படுத்துதல், வங்கிக் கணக்கிணக்கக்கூற்று தயாரித்தல் மற்றும் காசினை வங்கியிடல் தொடர்பான நிதி கட்டுப்பாட்டு முறைமைகளிலான குறைபாடுகள் கூட்டுத்தாபனத் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்தன.

ஒப்பம்: எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

## 2.2 நிதி கூற்றுக்கள் பற்றிய கருத்துரை

**2.2.1 (அ) இலங்கை கணக்கீட்டு நியமங்கள் 01**

அறவிடப்பட வேண்டிய கடன் மீதி பெறுமதியில் ரூ.4,409,866.00 செலவு மீதியில் குறைத்து காட்டப்பட்ட தவறை எதிர்வரும் வருடங்களில் நீக்கி சரியான கடன்பட்டோர் மீதி காட்டப்படும்.

**(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமங்கள் 02**

களஞ்சியசாலையில் விற்பனை நிலையங்களில் உள்ள கையிருப்புக்கள் வருடாந்தம் டிசம்பர் 31 ஆம் திகதியில் ஒப்பாய்வு செய்யப்படுவதுடன், இதற்கு அமைவாக கிரய பெறுமதிக்கு இற்றைவரை கையிருப்பு கணக்கிடப்பட்டுள்ளது. எதிர்வரும் ஆண்டுகளில் இருந்து மேற்படி இருப்புக்களின் ஆய்வு மாதிரி படிவங்கள் மாற்றப்பட்டு இறுதியிருப்பின் தேறிய பெறுமதி, தேறிய திரண்ட பெறுமதியில் கணிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு கையிருப்பு ஆய்வு குழுவிற்கு அறிவுரை வழங்கப்படும்.

**(இ) இலங்கை கணக்கீட்டு நியமங்கள் 07**

நிதிப்பாய்ச்சல் தயாரிக்கும் போது நிதி கூற்றுக்களில் பல்வேறு சீராக்கல்களை செய்ய வேண்டும். உதாரணமாக தொழிற்பாட்டு ரீதியாக திரட்டப்பட்ட வரவுகளை கணக்கிடும் போது தேய்மானம் மீண்டும் இலாபத்தில் சேர்க்கப்படும். எனவே ஏனைய சீராக்கல்களில் தேறிய பெறுமதி இவ்வாறு கடந்த ஆண்டின் சீராக்கலாக தொழிற்பாடுகளில் திரட்டப்பட்ட நிதியத்திற்கு செம்மையாக்கப்படும். எனினும் இயன்றளவு உரிய தரங்களுக்கு அமைவாக செயற்படுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

**(ஈ) இலங்கை கணக்கீட்டு நியமங்கள் 08**

(i) எதிர்வரும் ஆண்டுகளில் நிதி கூற்றுக்களில் வெளிக்காட்ட வேண்டிய விபரங்களை தெளிவாக குறிப்பிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

(ii) முழுமையாக தேய்மானம் செய்யப்பட்டுள்ள எனினும் இன்னும் பயன்படுத்தப்படும் சொத்துக்கள் உட்பட சகல சொத்துக்களும் தற்சமயம் ஒப்பாய்வு செய்யப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளது. எனினும் குறிப்பிட்ட அறிக்கைகள் மதிப்பீட்டு திணைக்களத்திடமிருந்து கிடைக்கப் பெறாமையினால் கணக்குகளில் சேர்ப்பதற்கு முடியாதுள்ளது. 2017 ஆண்டில் ஒப்பாய்வு செய்யப்பட்ட சொத்துக்களின் இணக்க கணக்குகளில் உள்ளடக்க முடியும்.

**(உ) இலங்கை கணக்கீட்டு நியமங்கள் 16**

(i) எதிர்வரும் ஆண்டுகளில் நிதி கூற்றுக்களில் வெளிக்காட்ட வேண்டிய விபரங்களை தெளிவாகக் குறிப்பிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

### 2.2.2 கணக்கீட்டு குறைபாடுகள்

(அ) இறுதி கணக்குகள் தயாரிக்கப்படும் திகதியில் தாமத கட்டணம் சரியாக கணிப்பிடப்பட முடிவதில்லையென்பதுடன், ஒப்பந்நதத்தின் அடிப்படையில் முற்பணம் பெற்றுக்கொள்ளும் தாமதம் காணப்படும் போது மூலப்பொருட்கள் கட்டளையும் தாமதமாக மேற்கொள்ளப்படும். அப்போது கல்வி வெளியீட்டு திணைக்களத்திற்கு எழுத்து மூலம் தெளிவுபடுத்தப்பட்ட பின்னர் தாமத கட்டணங்கள் தளர்த்தும் முறைமையும் உண்டு. அவ்வாறான சந்தர்ப்பமொன்றில் தாமத கட்டணத்திற்கு முழுமையாக ஒதுக்கம் செய்யப்படமாட்டாது.

(ஆ) 2014 ஆண்டில் மோட்டார் வாகன தேய்மான கணக்கில் காணப்பட்ட தவறான தேய்மான கணிப்பு பகுப்பாய்வு நிதியாண்டிலும் கணினியினால் கணிப்பிடப்படும் போது (Formula error) காணப்பட்டமையால் குறித்த தவறு நடந்தது. இந்த தவறை கண்டுபிடித்து தினசேரி குறிப்பொன்றை (JV No 160026 ஊடாக) பதிவு செய்து இந்த ஆண்டில் (2016) தற்சமயம் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(இ) எதிர்வரும் நிதியாண்டுகளில் 5 வருடங்களுக்கு மேலான கடன்பட்டோர் பற்றி போதுமான ஒதுக்கங்கள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

### 2.2.3 தெளிவுபடுத்தப்படாத மாற்றங்கள்

சம்பள பிரிவினால் தயாரிக்கப்பட்ட கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பற்றுச்சீட்டுக்களுக்கு எஞ்சிய விடுமுறை நாட்களுக்கான கொடுப்பனவுகள் 2015 இறுதி கணக்குகளில் காட்டப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| 2015 ஆண்டுக்குரிய எஞ்சிய விடுமுறை | |
| நாட்களுக்கான கொடுப்பனவுகள் | 16,913,389.42 |
| திரு.டப்ளியு.எஸ்.கே.ரத்னாயக்கவுக்கு கொடுப்பனவு | |
| (எஞ்சிய விடுமுறை நாட்கள்) | 46,339.00 |
| பற்றுச்சீட்டு மூலமான கொடுப்பனவு | 650.00 |
| 2014 ஆண்டில் மேலதிக கொடுப்பனவு | |
| (2014 ஆண்டில் இறுதி கணக்குகள் தயாரித்த பின்) | (22,803.19) |
| மொத்த கொடுப்பனவுகள் | 16,937,575.23 |

இந்த அட்டவணையில் குறிப்பிடப்பட்டிருப்பது விடுமுறை சம்பளம் தயாரிக்கப்படும் போது பெற்றுக்கொள்ளப்பட்ட கணினி பிரதியாகும். இங்கு தவறுகள் திருத்தப்பட்டு இறுதி கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டுள்ளன. இதனை அட்டவணையாக கருதுவது சரியானதல்லவெனவும், கொடுப்பனவு செலுத்துதலும் சரியாக 2015 ஆண்டில் சம்பளம் தயாரித்தலும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### 2.2.4 கணக்காய்வில் சாட்சியங்கள் இல்லாமை

கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டு கணக்கு மற்றும் கடன்கொடுத்தோர் இரட்டை கணக்கும் கடன்கொடுத்தோர் இரட்டை கணக்கும் ஏனைய பொது தினசேரி கணக்குகளும் மீதிகளும் உறுதிப்பாடுகளும் நிதி பிரிவில் இருந்ததாக குறிப்பிடுகிறேன்.

### 2.3 கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

(அ) கடனை அறவிடுவதற்காக கணக்காளரின் (வருமானம்) கீழ் விஷேட பணியாட் தொகுதியை நியமித்து இந்த கடன் அறிவீடு சீராக்கப்பட்டுள்ளது.

(ஆ) உரிய கடன்பட்டோர் மீதியில் 2 வருடங்களை தாண்டிய போதுமான செலுத்த வேண்டிய கடன்பட்டோர் மீதியொன்று காணப்படுவதை ஏற்றுக்கொள்வதுடன், அம்மீதீகளின் சரியான தன்மையை பரிசோதனை செய்த பின்னர் செலுத்தி தீர்ப்பதற்கு அல்லது நீக்கிவிடுவதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(இ) தேசிய கடதாசி கம்பனியிடமிருந்து கிடைக்க வேண்டிய நிதி முந்திய வருடங்களிலிருந்து தீர்மானிக்கப்பட்டிருப்பது கடன்பட்டோர் மீதியை தளம்பலுக்கு உட்படுத்தியாகும். இதனால் இந்நிலைமையை தீர்ப்பதற்கு உரிய நிறுவனத்திற்கும் (கணக்காய்வாளர் தலைமையதிபதி திணைக்களத்திற்கும்) எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

## 2.4 சட்டங்கள், ஒழுங்குவிதிகள், நிபந்தனைகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் பொருந்தாமை

(அ) 2002 ஆம் ஆண்டு 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரி சட்டம் (26) (1) உப பிரிவு.

2007 ஆம் ஆண்டு தொடக்கம் நிலுவையாக இருந்த 210 மில்லியன் ரூபாவுக்கு அதிகமான வரி தொகையை பகுதியாக செலுத்துவதற்கு உண்ணாட்டரசிறை திணைக்களத்துடன் இணக்கபாடு எட்டபட்டது. தவணைப் பணம் செலுத்தும் நடவடிக்கை ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதனால் நிறுவனத்திற்கு பாதிப்பு ஏற்படாத வகையில் நிதி திரவத்தன்மையை பேணுவதன் தேவை காணப்படுகிறது. எனவே உரிய வரி பணம் செலுத்துதல் தாமதிக்கப்பட்டாலும் எதிர்காலத்தில் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஆ) 2009 ஆம் ஆண்டு 09 ஆம் இலக்க தேசத்தை கட்டியெழுப்புதல் வரி சட்டம் 4 ஆம் உப பிரிவு

இதில் 54 மில்லியன் ரூபா தொகை கடந்த வருடங்களில் நிலுவை வரியாகும். இதனை உண்ணாட்டரசிறை திணைக்களத்துடன் இணக்கபாட்டின் அடிப்படையில் தவணை ரீதியில் செலுத்தும் பணி ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மொத்த நிலுவையாக இருந்த வரி பணத்தில் 41.7 மில்லியன் ரூபா 2016 ஜனவரி மாத இறுதியில் தவணையாக செலுத்தப்பட்டுள்ளது.

(இ) 2016 ஜூன் மாதம் தொடக்கம் உரிய உத்தியோகத்தர்களினால் வருமானமீட்டலின் போது செலுத்தும் வரி பணம் பிரத்தியேகமாக செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## 3. நிதி பகுப்பாய்வு

### 3.1 நிதி பெறுபேறு

விற்பனை கிரயத்தின் அதிகரிப்பு மற்றும் மேற் செலவு அதிகரித்தல் நேரடியாக வாடிக்கையாளர் மீது (மதிப்பீடுகளுக்கு) சேர்த்தல் முடியாமை போதல், அச்சு தொழிலுக்கான கடுமையான போட்டித்தன்மையும் கேள்விப்பத்திர முறைமைகளுக்கு ஏற்ப அச்சு கட்டளைகளை பெற்றுக்கொள்வதற்காக குறைந்தபட்ச விலைகளை சமர்ப்பிக்க வேண்டியேற்படுதலும் மொத்த வருமானத்தில் கூடுதலான பகுதி ஆண்டிறுதி தவணையில் மாத்திரம் கிடைக்கின்றமை போன்ற விடயங்கள் நிதி பெறுபேறுகள் மீது தீய அழுத்தங்கள் செலுத்தும்.

## 4. தொழிற்பாட்டு பகுப்பாய்வு

### 4.1 செயலாற்றுகை

(அ) மற்றும் (இ) வரையுள்ள நோக்கங்கள் குறித்து கவனம் செலுத்தவும்.

### 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பொதுமுகாமையாளரின் மேற்பார்வையின் கீழ் விற்பனை முகாமையாளரால் முறையாக விற்பனை திட்டமொன்று தயாரிக்கப்படுகின்றது.

### 4.3 செயலிழந்த குறை பயன்பாடுள்ள சொத்துக்கள்

2012 மற்றும் 2013 ஆண்டுகளில் பல்வேறு காரணங்களால் உற்பத்திக்கு தேவையான மூலப்பொருள் கையிருப்பு போதுமான அளவு கிடைக்காமையினால் அத்தியவசிய பொருட்கள் கிடைக்காமையின் அடிப்படையில் மெதுவாக விற்பனையாகும் பொருட்கள் தேங்கிவிட்டன.

இவ்வாறு எஞ்சிய கையிருப்புக்களில் கூடுதலான அளவு இணைப்பு ஊசி பொருட்கள் மற்றும் வருட இறுதியில் வேகமாக விற்பனையாகும் மற்றும் ஒப்பீட்டளவில் மெதுவாக விற்பனையாகும் பொருட்களால் குறுகிய காலத்தில் ஊசி இணைப்புக்கள் துருப்பிடித்தமையால் தரம் குறைந்து விற்பனை குறைந்தது. எனினும் 2014 ஆண்டில் மூலப்பொருட்கள் போதுமான அளவில் கிடைக்காமையால் அத்தியாவசிய பொருட்கள் உற்பத்தி மட்டுப்படுத்தப்பட்டன. இதனால் ஏனைய பொருட்களும் குறைவடைந்தமையால் இந்த பொருள் தொடர்ந்து விற்பனையாகாமல் எஞ்சியிருந்தன.

எனினும் வேறு விற்பனை நிலையங்களை சுத்தப்படுத்தும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், விற்பனை நிலையங்களில் காணப்படும் பழைய மற்றும் பழுதடைந்த புத்தக கையிருப்புக்களை நீக்குவதற்கு குழுவொன்று நியமிக்கப்பட்டு முதலில் விலை குறைக்கப்பட்டு விற்பனை நிலையங்கள் ஊடாகவே விற்பனை செய்வதற்கும் அதன் பின்னர் எஞ்சும் கையிருப்புக்களை தலைமை அலுவலகத்திற்கு கொண்டு வந்து அக்கையிருப்புக்களை முறையாக நீக்குவதற்கு ஏற்கனவே நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

## 4.4 பொருளாதார அடிப்படையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பழைய நிலுவை கடனை அறவிடுவதற்கு கழிவு தொகை செலுத்தும் அடிப்படையில் எதிர்கால பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பித்து அங்கீகரிப்பதற்கு வெகுஜன ஊடக மற்றும் தகவல் அமைச்சின் செயலாளர் வழங்கிய அறிவுரைக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## 4.5 இனம் காணப்பட்ட நட்டம்

அத்தியட்சகரினால் (களஞ்சியம்) களஞ்சியத்தில் காணப்பட்ட வங்கி கடதாசி மற்றும் வேறு சில கடதாசி சேதமடைந்தமை பற்றி முகாமைத்துவத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. இதற்கு அமைவாக பொது முகாமையாளரின் பரிந்துரையின் அடிப்படையில் 2015.09.01 ஆம் திகதி உள்ளக கணக்காய்வு பிரதிநிதி ஒருவரும் உள்ளடங்களாக குழுவொன்று நியமிக்கப்பட்டு, பயன்படுத்தக்கூடிய கடதாசிகளை தெரிவு செய்து அச்சு நடவடிக்கைகளுக்கு பயன்படுத்துவதற்கும், பயன்படுத்த முடியாத கடதாசிகளை அப்புறப்படுத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கு அமைவாக ஏனைய கடதாசி கையிருப்புக்களை கறையான்களிடமிருந்து பாதுகாப்பதற்கு, அக்கடதாசி இருப்புக்கள் களஞ்சியத்திலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கையிருப்பை நீக்குதல் மேற்படி குழுவின் தீர்மானத்திற்கு ஏற்ப மேற்கொள்ளப்பட்டதென கருத்திற்கொள்ளவும். இதற்கு அமைவாக ஏனைய கடதாசிகளுக்கு ஏற்பட்ட பெரும் அழிவை தடுக்க முடிந்தது.

## 4.6 வேறு அரச நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் சொத்துக்கள்

கூட்டுத்தாபனத்தின் காணியில் 13 ஏக்கர் 2 ரூட் 06 பர்ச்சஸ் தொழில்நுட்ப அபிவிருத்தி சபைக்கு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும் முறையான ஒப்படைத்தல் இன்றி இன்னும் நிறைவு செய்யப்படாமல் காணப்படுகின்றது.

## 4.7 பணியாட் தொகுதி நிர்வாகம்

விற்பனை பரிசோதகர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த உத்தியோகத்தர் மிக குறுகிய காலத்தில் அப்பதவியிலிருந்து நீங்கியுள்ளதுடன், எதிர்காலத்தில் தகுதி வாய்ந்த ஒருவரை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

## 5. கணக்கீட்டு நடவடிக்கைகளும் நல்லாட்சியும்

## 5.1 வரவு செலவு ஆவண கட்டுப்பாடு

வரவு செலவு ஆவணத்தை செயற்றிறனான முகாமைத்துவ நிர்வாகப் பணிக்காக பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

## 6. கட்டமைப்பும் நிர்வாகமும்

காசேடு தளம்பலின் போதும் வங்கி கணக்கிணக்க கூற்றினை தயாரிப்பதிலும் காசு வங்கியில் இடப்படும் போதும் நிதி கட்டுப்பாட்டு கட்டமைப்பில் காணப்பட்ட குறைபாடுகளை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

